# விபஸ்ஸனா
## செய்தி மடல்

(விபஸ்ஸனா : ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

**தங்க விழா (50) செய்தி மடல். டிசம்பர் 2019.**

(தொகுப்பு 29. எண் 12). சயாக்யி ஊ பா கின் பாரம்பரியம்.

வலை தளம் www.vridhamma.org International website: www.dhamma.org


**உத்தஹதா கம்மாதேயேஸூ, அப்பமட்டோ விதானவா; சமம் கப்பேடி ஜீவகா சம்பதம் அனுரக்கதி** ( தம்மா வாணி சங்ரஹா )

ஒரு நல்ல குடும்பத் தலைவர், எப்படி உழைக்க வேண்டும்?-- தனது கடமைகளைத் தள்ளிப்போடாமல், உண்மையாகவும், நேர்மையாகவும், தர்ம வழியில் வாழ்க்கைக்குத் தேவையான அளவு மட்டுமே ஊதியம் ஈட்ட வேண்டும். அவ்வாறு சாம்பாதித்த ஊதியத்தை கட்டுப்பாட்டுடன், நேர்மையான வழியில் செலவிடவேண்டும்.

மரியாதைக்குறிய திரு. கோயங்காஜீ, ஸயாக்யி யு பா கின் பாரம்பரிய வழிமுறையில் விபாசன்னா தியான முறையை கற்பிக்க ஆரம்பித்து தற்போது 50 ஆண்டுகள் (1969-2019) நிறைவடைந்துள்ளது. தவிர மதிப்பிற்குரிய அன்னை , மரியாதைக் குறிய ஸயாக்யி யு பா கின் இவர்கள் இருவரின் நினைவஞ்சலி ஆண்டாகவும் அமைந்துள்ள இத்தருணத்தில், *"மெத்தவிஹாரினி மாதாஜி"* என்ற புத்தகம் மற்றும் ஸயாக்யி யு பா கின் அவர்களின் பத்திரிகைகளில் இருந்தும் சில முக்கிய பகுதிகள் வாயிலாகவும், மேலும் மாதாஜியை நன்கு அறிந்த, அவர்களுடன் பழகியவர்களின் வாய் மொழியாகவும் கேட்டறிந்து, மாதாஜி அவர்களின் வாழ்க்கை முறை, குணாதிசயங்கள் சிலவற்றை இப்போது பார்ப்போமா?

## மாதாஜி - ஒரு உயர்ந்த மனிதருக்கு ஏற்ற ஒப்பில்லா துனைவி

அது 1942ஆம் ஆண்டில் நடந்த ஒரு திருமண விழா நடந்த நிகழ்வு. அக்காலத்தில், மணப் பெண்ணானவள், மண மேடையில் நுழையும்பொழுதும் சடங்கின்போதும், முகத்தை யாருக்கும் காட்டாமல் முக்காடிட்டே இருக்க

வேண்டும். இந்த விதி, அக்காலத்தில் கடுமையாக இருந்தது, ஏன் இன்றளவும் மார்வாடி குடும்பங்களில் கண்டிப்புடன் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. அந்த திருமண நிகழ்வில் மாப்பிள்ளை எவரும் எதிர்பாராத ஒரு கோரிக்கையை முன் வைத்தார். அனைவரும் அதிசயத்தில் வாயடைத்துப் போயினர். அப்படி என்ன தங்க ஆபரணம், கார் இவைகளையா அந்த மாப்பிள்ளை கேட்டார்; இல்லை. மணப் பெண், மேடைக்கு முக்காடிட்டு வரக்கூடாது என திட்ட வட்டமாகக் கேட்டுக் கொண்டார். இது அக்காலத்தில் எவரும் அனுமதிக்காதது, வழக்கத்திற்கு மாறானது. அன்றுவரை இப்படி ஒரு நிகழ்வு நடந்ததே இல்லை. மாப்பிளையின் உறுதியான முடிவை பார்த்த பெண் வீட்டினர் இதற்குச் சம்மதித்தனர். இவ்வாறு திரு. சத்ய நாராயண கோயங்கா, அன்னை ஸ்ரீமதி இலாச்சி தேவி திருமணம் இனிதே நடைபெற்றது.

அன்னை பிப்ரவரி 3, 1930ந்தேதி மண்டலேயில் ( பர்மா ) பிறந்தவர். அன்னை, திரு.கோயங்காஜீ அவர்களை விட 6 வருடம் இளையவர். அவரது இல்லம், திரு கோயங்காஜீயின் இல்லத்திற்கு அருகிலேயே இருந்தது. இரு குடும்பங்களும் மிக அன்பாகவும், ஒற்றுமையாகவும் பழகிவந்தனர். அன்னைக்கு 12 வயதிருக்கும்போது, அவர்களது திருமணம் இனிதே நடந்தேறியது. அக்கால வழக்கப்படி, திருமணமான பெண், வீட்டை விட்டு வெளியில் செல்லக் கூடாது. ஆகவே அவரது கல்வி, தடைபட்டது. திரு.கோயங்கா அவர்களுக்கு, பால்ய விவாகத்தில் சிறிதும் விருப்பமில்லை. ஆகவே தனது இரு மூத்த சகோதர்களிடம் முறை இட்டுப்பார்த்தார்; பலன் ஏதும் கிட்டவில்லை. தந்தையோ, அவரது விருப்பத்தைக் கேட்காமலேயே திருமணம் செய்து வைத்துவிட்டார். கோயங்கா அவர்கள் கல்வியில் மிகுந்த ஆர்வம் உடையவர்; மேலும், நல்ல மனோ பாவமும் கொண்டவர். அப்போது அவர் ஆர்ய சமாஜத்தின் நிறுவனரான சுவாமி தயானந்த சரஸ்வதியால் ஈர்க்கப்பட்டிருந்ததால் 25 வயதிற்கு முன் திருமணம் செய்துகொள்ள விரும்பியதில்லை. எனினும் குடும்பத்தில் மூத்தவர்களின் கட்டளைக்கு உடன்பட்டு 18 வயதிலேயே திருமணம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று.

அத்தகைய சூழ்நிலையில், ஒருவருக்கு மனைவி மீது கோபம் ஏற்படுவது இயல்பு. ஆனால் திரு கோயங்காஜீ அவ்வாறு நடந்துகொள்ளவில்லை. அவர் அக்கால சமூக நியதிகளை நன்கு உணர்ந்தவராக இருந்தார், மனைவி மீது சிறிதும் கோபம் கொள்ளவில்லை. தனது மனைவி தொடர்ந்து கல்வி கற்க வேண்டுமென்பதில் அவர் மிகவும் உறுதியாக இருந்தார்; ஆனால், சம்பிரதாயங்களை கடைபிடிக்கும் குடும்பத்தினர் மத்தியில் தானே நேரடியாக அன்னைக்கு கல்வி கற்பிப்பது சாத்தியமில்லை என்பதால் வைத்தியர்

ஓம்பிரகாஷின் மனைவி அவர்களின் உதவியை நாடினார். அவரது நெருங்கிய உறவினர் செளத்மால் அவர்களின் மனைவியும் கல்வியில் மிகவும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். இவ்விரு பெண்மணிகளும் ஊக்கத்துடன் செயல்பட்டு அன்னை மற்றும் கோயங்கா குடும்பத்தில் இருக்கும் மற்ற 20 பெண்மணிகளுடன் வீட்டிலேயே ஒரு சிறு பள்ளி உருவாக தொடங்கியது.

அன்னை இலாச்சிதேவி, கல்வியில் மட்டுமின்றி விபாசனா தியானத்திலும் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டார். திரு கோயங்காஜீ அவர்கள் இந்தியா வந்து விபாசான தியான முறையை கற்பிக்க ஆரம்பித்த பொழுது அவரும் தன் கணவருக்கு உறுதுணையாக விபாசான முகாம்கள் மற்றும் பொது நிகழ்வுகளில் பணியாற்ற தொடங்கினார். தியான முகாம்களில், வகுப்பு நேரங்கள், கேள்வி-பதில் நேரங்கள், சொற்பொழிவு நேரங்கள் அனைத்திலும் திரு கோயங்காஜீ அவர்களுக்கு உறுதுணையாக, நிழல்போல பின் தொடர்ந்து செயல்பட்டார். குடும்ப கடமைகள் காரணமாக விபாசனா கடமைகளிலிருந்து விலகி இருந்தது, மிகச் சில தருணங்களில் மட்டுமே.

## ஸ்ரீமதி சாவித்ரி வியாஸ் அன்னையுடன் உரையாடியது

ஸ்ரீமதி சாவித்ரி வியாஸ் : நீங்கள் இருவரும் எப்பொழுதாவது சண்டை போட்டதுண்டா?

அன்னை : இல்லை. திரு.கோயங்காஜி சட்டென கோபப்படுபவர். நினைத்தமாத்திரத்தில் அவரை யாரும் அணுகிவிட முடியாது. அவர் வீட்டிற்குள் நுழைந்தாலே அனைவரும் தீவிரமடைந்துவிடுவார்கள். ஏதாவது ஒருவிதத்தில் அவரிடம் அனைவருக்கும் ஒருவித பயமிருந்தது. ஆனாலும் அவர் யாரிடமும், கடுஞ்சொல் கூறியதோ சண்டையிட்டதோ கிடையாது. அவர் கோபத்தில் கத்துபவர் தான்; ஆனாலும் விபாசனா சாதனைக்குப் பின்னர், கத்துவதை முற்றிலும் நிறுத்திவிட்டார். அதன் பிறகு, தனது எதிர்பைத் தெரிவிக்க ஓரிரு வார்த்தைகள் மட்டுமே பேசுவார். ஆவேசம் காணமல் போய்விட்டது.

ஸ்ரீமதி சாவித்ரி வியாஸ் : உங்களுக்கென தனிப்பட்டமுறையில், ஏதாவது விருப்பம் உண்டா?.

அன்னை : தையல், பின்னல் வேலைகளிலும் மற்றும் அழகிய கைவிசிறிகள் செய்வதில் ஆர்வமுண்டு. பிற்காலத்தில், மின்சாரம் உபயோகத்தில் வந்தபின், கைவிசிறி செய்வதை நிறுத்திவிட்டேன்.

அன்னை அதிகம் பேசுபவரல்ல, ஆனால் விபாசனா சாதனைகளில், உச்சியைத் தொட்டவர். அவரின் நாகரீகமான, வித்தியாசமான, அமைதியான குணத்தினால், குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் என அனைவரும், அவர்பால் ஈர்க்கப்பட்டனர். அவரது பெருந்தன்மையைக் குடும்பத்தினர் மிகவும் புகழ்ந்து பேசினர். அவரது அர்ப்பணிப்பாலும், நேர்மையாலும், எளிய வழி முறையாலும், சாதனைகளில் மூழ்கி, சரியானதொரு இணை பயணியாக, திரு கோயங்கா அவர்களுடன் சேர்ந்து "தம்மா" ஒரு உண்மையான வழி என வாழ்ந்து நிரூபித்தார்.

## இந்திரா பிரஹ்மபாத் அன்னையுடன் திரு சயாக்யி அவர்கள் பற்றி உரையாடியது

இந்திரா : திரு. சயாக்யியுடனான தங்களது முதல் சந்திப்பின் சாராம்சத்தைப்பற்றிக் கூறவும்.

அன்னை : திரு. கோயங்கா அவர்கள் பர்மாவில் முதல் 10 நாட்கள் விபாசனா பயிற்சியை முடித்த பிறகு, நான் திரு சயாக்யி அவர்களை சந்தித்தேன். அவர் எனக்கு "ஆனாபானா" கற்றுத் தந்தார். அதை நான் எப்போதோ ஒரு முறைதான் பயிற்சி செய்தேன். எனக்கு ஒருவித தலைவலி வர ஆரம்பித்தது. இதைக் கேள்வியுற்ற, சயாக்யி, திரு.கோயங்காவிடம், நான் 10 நாட்கள் வகுப்பில் சேர்ந்து கற்க வேண்டும் எனக் கூறிவிட்டார். அவ்வாறு செய்தால், திரு.கோயங்காவின் முன்னேற்றத்திற்கும் அது மிகவும் உறுதுணையாக இருக்குமென்றார்.

அவ்வாறே நடந்தது. அவரது வார்த்தை நிரூபணமானது. திரு கோயங்கா அவர்கள் உலகம் முழுவதும் "தம்மாவை" பரப்பும் பணியில் அன்னை அவர்கள் உறுதுணையாக நின்று மிகவும் தீவிரமாகச் செயல்பட்டார். அஸ்திவாரம் எப்படி கண்ணுக்குத் தெரியாமல் கட்டிடத்தினைத் தாங்கி நிற்கிறதோ அதுபோல, அன்னையின் பங்கு திரு. கோயங்கா அவர்களின் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒன்றாக இருந்தது.

இந்திரா : சயாக்யி அவர்கள், பர்மிய அல்லது ஆங்கில மொழிகளில் மட்டுமே பேசுவார். அப்படி இருக்கத் தாங்கள் அவரிடம் எப்படி பேசுவீர்கள், அவரின் சொற்பொழிவை எவ்வாறு புரிந்துகொள்வீர்கள் ?

அன்னை : சயாக்யி அதிகம் பேசமாட்டார். எளிய ஹிந்தியில் ஓரிரு வார்தைகள் மற்றும் சமிக்ஞைகள் மூலம் அவர் என்னிடம் கேள்வி கேட்க, நான் ஹிந்தியில் பதில் சொல்வதை, அவர் புரிந்துகொள்வார். அவரது சொற்பொழிவு, மிக எளிமையாக 15 முதல் 30 நிமிடங்கள் மட்டுமே நீடிக்கும். திரு கோயங்கா அவர்களும், இந்திய சாதனையாளர்களுக்கு மொழி பெயர்ப்பு செய்து உதவுவார். இதன் உட்பொருள் என்னவென்றால், அவர் நமக்கு பாதையை காட்டினார், எவ்வாறு செயல்பட வேண்டும் என்றும் கூறினார். அதன் பிறகு நாம் செய்ய வேண்டியதெல்லாம் சாதனை ஒன்றே. இது சுலபம் தானே? ஆகவே அதிகம் செயல்படுவோம், குறைவாகப் பேசுவோம்.

## தாய் நாட்டின் மீதான அன்னையின் உறுதியான அன்பு

நவம்பர் 14, 1962 . அப்போதைய பிரதம மந்திரி மாண்புமிகு ஜவஹர்லால் நேரு பிறந்ததினம். அன்று, அன்னை அவருக்கு எழுதிய கடிதம் ( அது , சீனா இந்தியாவுக்கிடையே நடந்த போர்க் காலம் ஆகும்)

மரியதைக்கு உரிய ஜவஹர்லால் நேரு அவர்களுக்கு,

“ ஜெய் ஹிந்த் ” ( இந்தியாவிற்கு வணக்கம் )

தங்களுக்குப் பிறந்த நாள் நல் வாழ்த்துடன், ஒரு சிறிய அன்பளிப்பை அனுப்பிவைக்கிறேன். விலை மதிப்பற்ற தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக, நமது ராணுவ வீரர்கள் போர் புரிகின்றனர். திருமணத்தின் போது எனக்கு பரிசாக வழங்கப்பட்ட நகைகள் மூலம் மற்றவர்களுக்கு உதவி செய்ய முடிந்தால் நான் பாக்கியசாலியாக உணர்வேன். மற்ற பெண்களை போல நானும் நகைகளை விரும்புகிறவள் தான். ஆனால், நாட்டின் எல்லையை போர் மேகங்கள் சூழ்ந்து சுதந்திரத்தை அச்சுறுத்தும்போது, இந்த நகைகள் மீது இருக்கும் ஆசை, ஒரு தூசுக்கும் சமமல்ல. எனது நாடு சுதந்திரத்துடன் இருப்பதையே எப்போதும் நான் விரும்புவேன். நான் இந்தியாவின் குழந்தை, எனது மூதாதையர் **பாமாஷா** (மஹாராண பிரதாப் சிங் அவர்களின், பிரதம தளபதி) முகலாய போரின்போது அனைத்தையும் இழந்த அவர், இன்றளவும்

புனிதமான ஒரு உருவச்சிலையாக எனது மனக் கண் முன்னர் தோன்றுகிறார்.

இந்த நகைகளின் மதிப்பு வெறும் 100 தோலாக்களே, எனினும் நம்புங்கள் எனது சுடர் விட்டு ஒளிரும் உற்சாகம் அளவிட முடியாததது, இதய பூர்வமானது. எல்லையில் போரிடும் ராணுவ வீரர்களிடம் கூறுங்கள், இந்தியாவில் வாழும் இந்தியர்கள் மட்டுமல்ல, உலகின் பிற நாடுகளில் வசிக்கும் அனைத்து இந்தியர்களும், அவர்களுடன் இருக்கிறார்கள் என்று. எங்களது அன்பான அரவணைப்பு ,நல்லெண்ணங்கள், அவர்களின் இதயத்தில் வீரத்தைத் தூண்டி, பயத்தை அகற்றி, வெற்றியை ஈட்டித்தரும் எனக் கூறுங்கள். எனக்கு நம்பிக்கை இருக்கிறது, “தங்களது தலைமையின் கீழ் வெற்றி நமதே” என. அந்த நன் நாளிற்காக ஒரே ஓரு எதிரியுமில்லாது எல்லையிலிருந்து விரட்டி அடிக்கப்பட்டனர் என்பதைக் கேட்பதற்கு ஆர்வத்துடன் காத்திருப்பேன்.

இப்படிக்கு - மரியாதையுடன், இந்தியாவின் மகள் - இலாச்சி தேவி.

பின்குறிப்பு:- டிசம்பர் 12, 1962 அன்று இந்திய பிரத மந்திரியின் காரியாலயத்திலிருந்து அவருக்கு பதில் கடிதம் வந்தது. தங்களுடைய 5-12-1962 கடிதத்துடன், தங்க ஆபரணங்கள் 2017.250 கிராம், 11.12.1962 அன்று கிடைத்தது. தங்களது செய்கையை நாடு நன்றி உணர்ச்சியுடன் பாராட்டுகிறது

## அன்னையை பற்றி அவரின் மருமகள் நைனா கோயங்கா

நான் 39 வருட காலம் அன்னையின் அரவணைப்பில் வாழ்ந்தவள். அவர் அளவற்ற பொறுமையுடனும், தாயுள்ளத்துடனும், எங்கள் குடும்பத்தினர் மீது மட்டுமில்லாமல் தம்மா சாதகர் அனைவர் மீதும் அக்கறை கொண்டவராக இருந்தார். அன்னை தனது 86 வயதிலும் சுறுசுறுப்பானவராக எந்த வேலைகளையும் விரைவாகவும் திறமையாகவும் செய்ய கூடியவராகவும் ஒரு போதும் சோர்வாகவோ சோம்பலாகவோ அவர் இருந்ததில்லை. யார் மீதும் வெறுப்புணர்வு இல்லாதவராகவும், மற்றவர்களை பற்றிய கிசுகிசுக்கள் பேசாதவராகவும் இருந்தார்.

மாமியார், நாத்தனார்கள், மைத்துனன்கள், மகன்கள், மருமகள்கள், பேரக்குழந்தைகள் மற்றும் கொள்ளு பேரக்குழந்தைகள் என மகிழ்வான குடும்பம் அன்னையின் அன்பான அரவணைப்பினாலும் வழிகாட்டுதலினாலும்

ஒற்றுமையுடன் இருந்தது. அன்னை, தன் விதவை நாத்தனாரையும் அவள் மகனையும் தன் குடும்பத்துடனேயே வைத்து கொண்டார். இளைய மைத்துனி ஒருவரின் மறைவுக்குப் பின், அந்த மைத்துனரையும் குடும்ப உறுப்பினராக ஏற்றுக்கொண்டார். அதுமட்டுமின்றி, ஆறு மறுமகள்களின் குடும்பத்தாரிடமும் நல்ல சுமூகமான உறவை நிலை நாட்டினார்.

எனது பெற்றோர்கள் என்னை 20 வருடங்கள் வளர்த்து ஆளாக்கினார். பின்னர் திருமாணாமாகி, புகுந்தவீடு வந்தேன்; என் புதிய பெற்றோர்கள், என்னை, பிரியமாக வரவேற்றனர். எனக்கு விபாசான தியானம் பயிற்றுவிக்கப்பட்டது. நான் வழக்கமாய் பதற்றபடுபவளாக இருந்தேன். படிப்படியாக, விபாசனா பயிற்சி செய்ததின் விளைவாக, பதற்றம் குறைந்தது. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நான் பதற்றப்பட்டாலும் அன்னை தன் பொறுமையாலும் அன்பாலும் நான் அதை கடந்து போக உதவினார். எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது; ஒருபோதும் அன்னை என்னை கடிந்துகொண்டதில்லை, வேற்றுமைப் படுத்தியதுமில்லை.

அன்னை, எங்கள் ஆறு மருமகளுக்கும் ஒருவருக்கொருவர் மதித்தும், கடின வார்த்தைகள் தவிர்த்தும் ஒற்றுமையாக வாழ வழிகாட்டினார். வீட்டில் யார் எது வாங்கி வந்தாலும், அனைவருக்கும் அது சமமாக வந்து சேரும். உணவு வகைகள், குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொருவரின் ருசி மற்றும் அவர்களின் உடல்நிலையை கருத்தில் கொண்டு தயாரிக்கப்படும். அனைவரும் ஒன்றாகவே உட்கார்ந்து சந்தோஷமாக உணவு உண்போம். யாருக்காவது உடல் நிலை சரியில்லை என்றால் அனைவரும் அவருக்கு ஆதவாரக இருப்போம். வீட்டில் பிற வேலைகள் குடும்ப கணக்கு வழக்கு என அனைத்தையும், அவரவர்களுக்கு ஏற்றவாறு பகிர்ந்தளித்து, யாருக்கும் கஷ்டமேற்படாமல், திறம்பட குடும்பம் நடக்க வழி வகுப்பார்.

வீட்டிற்கு தினமும் விருந்தாளிகள் வந்தவண்ணமே இருப்பர். விருந்தோம்பல் எனும் கலையை அனைவருக்கும் கற்றுக்கொடுத்தார். ”விருந்தினர் என்பவர் கடவுள்” எனும் இந்திய மரபுடன் அன்னை வாழ்ந்தார். விருந்தினர் வருகையால் ஒரு வீடு ஆசிர்வாதிக்கப்படுகிறது என அன்னை கூறுவார். அதுபோலவே தானம் செய்தல், அதன் சிறப்பு, நன்மைகள் முதலியவற்றை செயலில் காட்டி, அதிலும் குடும்ப அங்கத்தினர்களை ஈடுபடவைத்தார். நம் மகிழ்ச்சியான காலக்கட்டங்களில் நண்பர்கள் எளிதில் கிடைப்பார்கள். ஆனால் கஷ்ட காலங்களில் நம்முடன் இருப்பர்களே உண்மையான நண்பர்கள் என்பதையும் எங்களுக்கு சொல்லிக்கொடுத்தார்.

விபாசான தியானத்தை பரப்பும் திரு.கோயங்காஜீயின் பிரமாண்டமான பணிக்கு அன்னை உறுதுனையாக இருந்து சிறந்த மனைவிக்கு எடுத்துக்காட்டாக எங்களுக்கு விளங்கினார். திரு.கோயங்காஜீ அவர்களின் வயதான காலங்களில் அவருக்கு உணவு மற்றும் மருந்து வழங்குவதில் மெத்தா கலந்த பிரத்தேயகமான கவனம் செலுத்தியதை பார்த்த எங்களுக்கு, நாமும் இவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற உத்வேகத்தை எங்களுக்கு ஏற்படுத்தியது.

கடினமான காலகட்டங்களில் அன்னை உள்ள சமநிலை தவறாமல் தைரியத்துடன் இருந்தார். அவரின் திருமணம் முடிந்த கையோடு அவர் மேற்கொண்ட பர்மாவில் இருந்து இந்தியாவிற்க்கான ஆபத்தான பயணத்தின் போது கூட அவர் சிறிதும் கலங்கவில்லை. எதிர்பாராத நேரத்தில் நேரத்தில் நடந்த அன்னையின் இளம் வயது பேரன் இறந்தபோதும், அன்னையின் மகன் இறந்த போதும் மதிப்பிற்குறிய திரு.கோயங்காஜி இறந்த போதும் உள்ள சமநிலையுடனும் மெத்தாவுடன் அமைதியாகவும் கட்டுப்பாட்டுடன் இருந்தார். இத்தகைய பெற்றோருடன் நெருங்கி பழகி அவர்களுடன் நான் வாழ்ந்ததை எனது புண்ணியமாக கருதுகிறேன். அவர்களின் கடைசி காலங்களில் அவர்களுக்கு உறுதுணையாக இருந்ததை நான் ஆசிர்வதிக்கபட்டவளாய் உணர்கிறேன்.  உன்னத பெற்றோர்களுக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கங்கள்.

## பூக்கள், செடிகளிடம் அன்னை மற்றும் கோயங்காஜி இருவரின் ஆர்வம்

**- திரு யாதவ்**

இருவருமே தோட்டக்கலையில் நேசமுள்ளவர்கள். ஹைதராபாத் விபாசனா மையத்தில் வகுப்புகள் முடிந்து திரும்பும் போது, அங்கு அவர்கள் பார்த்து ரசித்த பசுமைப் புரட்சி மலர்கள், தோட்டம்போல இகாட்புரியிலும் ஏற்படுத்த முடிவு செய்தனர். வித விதமான பூச்செடிகளையும், உறுதியான மரங்களையும் நட்டு வனத்துறையினரை வரவழைத்து இவைகள் செழிப்பாக வளர்வதற்க்கு ஆலோசனை கேட்டறிந்தனர். சிறிதளவு மாங்காய் மரங்களுடன் இருந்த இந்த மையம் விரைவில் மரம் செடிகளுடன் வளமிக்க

பசுமையான இடமாக மாறியது. இந்த தாவார இனங்கள் அதிக பராமரிப்புகள் இல்மாமலேயே நன்றாக வளர ஆரம்பித்தது. மையத்தில் அப்போது நடந்து கொண்டிருந்த கட்டுமான பணிகள் இந்த தாவர இனங்களை அகற்றாமல் அழிக்காமல் தொடரப்பட்டது.

யாராவது பூக்களைப் பறித்தால், கோயங்காஜீ அவரை கடிந்துகொள்ளாமல், இதமான வார்த்தைகளில் "தோட்டத்தில் இந்த பூக்கள் பார்வைக்கு எவ்வளவு அழகூட்டி கொண்டிருந்தது, கொடியிலேயே அவை இருந்திருந்தால், மேலும் ஓரிரு நாட்கள் உயிருடனிருந்திருக்கும், ஆனால் இப்போது அது அழிந்து விடப் போகிறது, இவ்வாறு இனிமேல் செய்யாதீர்கள்" என கூறுவார்.

அன்னை மற்றும் கோயங்காஜீ இருவரும் வீட்டின் வெளியே மற்றும் தம்மகிரி தோட்டத்தில் இருக்கும் செடிகள் பூக்கள் இடையே நடந்து கண்காணித்து, அவைகளின் வளர்ச்சி செழுமையை அனுதினமும் பார்த்து மகிழ்ந்து அவைகளை தொட்டு மெட்டாவை வழங்குவர். தவிர்க்க முடியாத காரணத்திற்காக, ஒரு மரத்தை வெட்டவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால், அதன்முன்னே நின்று தங்களது நேசத்தைப் பொழிவர். அது மட்டுமல்லாது, அவைகளிடம் வேண்டுகோளும் விடுப்பார்கள்; அது முணுமுணுப்பாக இருப்பினும், அவருக்குப் பின்னால் நிற்பவர்களுக்கு நன்றாகவே கேட்கும். தம்மா மண்டபத்திலும், பகோடா தியான அறைகளிலும், உள்ளும், புறமும் எண்ணிலடங்கா தேவர்கள் வசிப்பதாக நம்பப்படுகிறது. இத்தருணத்தில், அன்னை செடி, கொடி, மரங்களிடத்தே அதிக கவர்ச்சி உடையவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் தனது ஜூஹூ பங்களாவில், பூந்தொட்டிகளில், மண்ணுடன், உரமும் கலந்து நீர் ஊற்றி செடிகளை பிரியமுடன் வளர்த்து வந்தார். தோட்டத்தில் நடக்கும்போது தோட்டக்காரனையும், உடன் அழைத்துச் செல்வார்கள், அவனுக்குப் பலப்பல நுணுக்கங்களைச் சொல்லிக்கொடுப்பார்கள். மதில் சுவர்களின் மேல் பெரிய தொட்டிகளில் கொடிகளை வளர்த்து, அவை நன்றாக அழகுடன் படர வசதிகள் செய்வார். இந்த ரம்மியமான காட்சியானது அண்டை அயல் வீட்டினரையும் ஈர்த்து, அவர்களுக்குப் பரவசமளிக்கும். பின்னர் அவர் டூபிளெக்ஸ், குடி இருப்பில் 13, 14 ஆம் தளங்களில் வசித்து, அச்செடி கொடிகளின் செழுமை, அழகு வண்ணத்தில் லயித்து பரவசப்படுவார். அவரது மொட்டை மாடித் தோட்டத்தைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ!.

## பீகார் கவர்னர் திரு ராம்நாத் கோவிந்த் அவர்களை ஆசீர்வதித்தல்

தற்போதைய இந்திய ஜனாதிபதி, 2015ம் ஆண்டில் பீகார் மாநில கவர்னராக பணியாற்றி வந்தார். அவர் மும்பைக்குப் பணி நிமித்தம் சென்றபோது, கோரியில் பகோடாவை பார்வை இட நினைத்தார், ஆயின் அவருக்குக் கிடைத்த தகவலோ வேறு விதமாக இருந்தது. அன்னை சிகிச்சைக்காக, லீலாவதி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது. இவ்வாறு அவர் அன்னையை, 2015, டிசம்பர் 25ந்தேதி அன்று சந்தித்து உடல் நலம் குறித்து விசாரித்தார். அன்னையால், கண்களைத் திறந்து பார்க்க இயலவில்லை. அன்னையின் மகன் பிரகாஷ் அவரின் காதில் விஷயத்தை முணுமுணுத்தான். கண்ணைத் திறக்க முடியாத நிலையிலும், அன்னை இரு கைகளையும் உயர்த்தி ஆசீர்வதித்தார். திரு ராம்நாத் கோவிந்த் அவர்கள் கைகளைக் குவித்து வணங்கிவிட்டு, வைத்தியர்களின் ஆலோசனைகளை கேட்டுவிட்டுச் சென்றார்.

**அன்னையின் கடைசி கணங்கள்** : **திரு யாதவ் மேலும் தொடர்ந்தார்**.

நான் பாட்னாவில் தம்மா வகுப்பு முடித்துவிட்டு இகாட்புரி திரும்பி வந்தேன். அப்பொழுது, அன்னை வைத்தியசாலையில் இருப்பதைத் தெரிந்துகொண்டு உடனே அங்கு சென்றேன். அவரின் ஆசிகளினாலேயே நான் அவருக்குப் பணிவிடை செய்ய முடிந்தது; உடனே நான் அவரை, மும்பை வைத்திய சாலைக்கு மாற்றி அழைத்துச் சென்றேன். நாட்கள் மெதுவாகக் கழிந்தன, வைத்தியர்களின் சிறு சிறு நம்பிக்கையான வார்த்தைகள், அனைவருக்கும் ஆறுதலாக இருந்தன. கடைசி கால கட்டத்தில், பல நாட்கள் அன்னை கண்களைத் திறக்கவே இல்லை. அவர் இவ்வுலகை விட்டுச் செல்வதற்கு முன் தினம், நான் அவரின் காதுகளில், அன்னையே இந்த யாதவின் அன்பான வணக்கத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் என பணிவுடன் கூறினேன், என்ன ஆச்சர்யம், அன்னை கண்களைத் திறந்தார், முகத்தில் ஒரு மென்மையான புன்னகை, எனது மரியாதையை ஏற்றுக்கொண்டதின் அடையாளம். இதற்கு முன் எவர் ஒருவரும், பல நாட்களாக அன்னை சிரித்ததைப் பார்த்ததே கிடையாது. அவரின் புன்னகை, அவர், முழு நினைவுடன் இருந்ததையும் என்னை அடையாளம் கண்டுகொண்டதையும் தெளிவாக விளக்கியது. வியப்பில் நான் அவரிடம், இனி தாங்கள் உடல் நலம் அடைந்துவிடுவீர்கள் என்றேன். அதைக் கேட்டு இல்லை எனும் விதமாகத் தலை அசைத்து கண்களை மூடிக்கொண்டார்.

நான் இரவு நேரங்களில் வைத்திய சாலையில் படுப்பது வழக்கம். ஆயின் அன்று இரவு, அவரின் பேரன்களில் ஒருவன், தான் அன்று இரவு

இருப்பதாகக் கூறி, நீங்கள், இன்று வீடு சென்று சிறிது ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்றான். நான் திரு கோயங்காஜி அவர்களின் இல்லத்திற்குச் சென்றேன். அன்று அன்னையின் உடல்நிலை மீண்டும் மோசமாகிவிட்டது. உடனே நான் இரவு 1 மணிக்கு வைத்திய சாலை சென்றேன். சிறிது நேரத்திலேயே அவரது உடல்நிலை, முன்பு இருந்ததைப் போல ஓரளவு தேறியது. ஆகவே நாங்கள் வீடு திரும்பிவிட்டோம். மறுநாள் காலையில், வைத்தியர்கள், நம்பிக்கையை இழந்தனர். அவரது உறுப்புகள் ஒவ்வொன்றாக, செயலிழக்க ஆரம்பித்து, அவரின் கடைசி மூச்சும் நின்றது. அவரது முகத்தில், ஒரு அலாதியான அமைதி நிலவியது. அதைக்கண்ட வைத்தியர்களுக்கே பெருத்த ஆச்சரியம், எப்படி அவர் அந்த மோசமான உடல் நிலையிலும் மிகுந்த அமைதியுடன் இருந்தார்; அவர்களுக்கு எப்படித் தெரியும் அது அன்னையின் உயர்ந்த, நிலையான விபாசனா சாதனையின் பலன் என்று.

## அதிகாரத்துக்கிடையிலும் சயாக்யி அவர்களின் நல்லொழுக்கமும் எளிமையும் - திரு.கோயங்காஜி.

சயாக்யி பர்மாவில் வாழ்ந்த அக்காலத்தில், அரசாங்கத்தில் சில உயர் பதவிகள் இருந்தன. அதன் மூலம் ஒருவர் அதிக சுகம் அனுபவிக்கலாம், பண வரவும் அடையலாம். இது சம்பளத்தினால் அல்ல, குறுக்கு வழியில், லஞ்சம் பெறுதலில். ஆகவே. அத்தகைய வேலைகளிலிருந்து ஓய்வு பெற்ற ஒருவர் கூட ஏழையாக வெளி வந்ததில்லை. ஆயின் உயர் திரு சயாக்யி, ஓய்வு பெற்ற காலத்தில், மிகச் சொற்பமான சேமிப்புடந்தான் வெளிவந்தார். அவர், ஒரே சமயத்தில் 4 அரசாங்க பணிகளில் ஈடுபட்டிருந்தாலும், ஒரு சம்பளம் மட்டுமே வாங்கிக்கொண்டார். குறுக்கு வழிகளைச் சிந்தித்தும் பார்த்ததில்லை.

சயாக்யி தனது குழந்தைகளுக்காக சிறிய வீடு ஒன்றை கட்ட ஆசைப்பட்டார். அதற்கு 10,000 ரூபாய் குறைவாக இருந்தது. செய்வதறியாமல் சிந்தித்தார். அவர் கேட்டிருந்தால் பலர் உடனே கொடுத்திருந்திருப்பார்கள். ஆயின் அவர் அப்படி ஒருவரிடமும் கேட்கவே இல்லை. நானோ அவரது மாணவன், கொடுக்க விருப்பம், பண வசதி இருந்தது. கேட்டுப் பார்த்தேன். அவர், நீ எனது மாணவன், உன்னிடமிருந்து தானமாக, சுய நலத்திற்காக வாங்கிக் கொள்ள முடியாது என மறுத்து விட்டார். நான் வேறு ஒரு உத்தியைக் கையாண்டேன். தானமாக வேண்டாம், கடனாகவே பெற்றுக்கொள்ளுங்கள் என்றேன். அவர் ஏற்றுக்கொண்டார், வீடும் கட்டி முடித்தார். உண்மையில்

நான் கொடுத்த பணத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்ற எண்ணமே என் மனதிலிருந்ததில்லை. ஆனால் நடந்தது என்ன? அவர் தனக்கு மாதா மாதம் வரும் ஓய்வூதியத் தொகையை ஒரு ரூபாய் கூட எடுத்துக்கொள்ளாமல் அப்படியே முழுவதுமாகக் கொடுத்து பாதிக் கடன் அதாவது ரூபாய் 5,000 அடைத்து விட்டார். அவரின் இந்த செய்கை எனக்கு மிகுந்த துயரத்தை அளித்தாலும், என்னால் ஒன்றும் செய்ய இயலாது போயிற்று.

அத்தருணத்தில், எனது அத்தை தனது வாழ்வின் கடைசி காலக் கட்டதிலிருந்தார். அவரும் சயாக்யியின் மாணவி. இங்கு ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். கீழைநாட்டு மக்களிடையே ஒரு பழக்கம் இருந்தது. அதாவது ஒருவர் இறக்கும் தருவாயில், அவர் தனது சொத்து முதலியவைகளை குடும்பத்தினருக்கும், பிறருக்கும், குருவிற்கும் தானமாகக் கொடுக்கலாம். இதை எவரும் மறுக்க முடியாது. அவ்வகையில், நான் அத்தையிடம் ஒரு கேள்வியை முன்வைத்தேன். தாங்கள் நிறைய சொத்து உள்ளவர், எங்கெல்லாம், யாருக்கெல்லாம் தானம் செய்யப் போகிறீர்கள் ?

எனது அதிருஷ்டம், அவர் என்னையே திரும்பக் கேட்டார், உன் விருப்பம் என்னவோ அதன்படியே என்றார். நான் பல இடங்களின் பெயர்களையும், வைத்திய சாலைகளையும், தொண்டு நிறுவனங்களின் பெயரையும் கூறினேன். பின்னர் இது தவிர, வேறு ஏதாவது உள்ளதா எனக் கேட்டேன். அதற்கு அத்தை அவர்கள், நமது குரு சயாக்யி அவர்களுக்கு ரூ.5000 கொடுக்க விரும்புகிறேன் என்றார்.

எனது மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. கண்டிப்பாக சாயக்யி அவர்கள் தனது மாணவர் வழங்கும் தானத்தை ஏற்று கொள்ளுவார். எனது குருவிடம் நான் வாங்கிய 5,000 ரூபாய் வாங்கிய போது ஏற்பட்ட சங்கடத்தை போக்கி கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமைந்தது.

அத்தையின் கடைசி நேரமும் வந்தது. சாயக்யி அவர்களிடம் நான் ரூ. 5000 / கொடுத்தேன். சாயக்யி அந்த பணத்தை பெற்று கொண்டு என்னிடம் "இதோ தானமாக ரூ.5000 வந்துள்ளது. இதை தம்மா சேவைக்காக தானம் செய்கிறேன்" என கூறினார்.

அதன் பிறகு மீண்டும் அவரது மாதாந்திர பென்ஷன் பணத்தைத் திரும்பத தந்து எனது கடனை முழுவதுமாக அடைத்துவிட்டார். இத்தகைய செய்கையை, ஒரு மகாத்மாவால் மட்டுமே செய்யமுடியும் என்பதை அன்று

நான் உணர்ந்து கொண்டேன். எவ்வளவு வாய்புக்கள் கைக்கு எட்டிய தூரத்திலிருந்தும், உயரிய குறிக்கோள், நற்பண்பு மற்றும் லட்சியத்தை ஒருபோதும் விட்டுக்கொடுக்காமல் நேர்மையான நடத்தையால் உலகிற்கே எடுத்துக்காட்டாக தன்னிகரில்லாத தனிப்பெரும் மாமனிதராக, வாழ்ந்து காட்டி மறைந்தார்.

One day vipassana for old students (who have done 10days before) will be on every Sunday from 9am onwards at Agarwal School, EVK Sampth Salai Vepery Chennai (Agarwal School is Opp to New Commissioner's office and about 5th from Thinathanthi office) (Evk Sampath Salai is Opp to Egmore metro side station) contact number is 9841591734.

**************************************************************************************

DHAMMA DOHA

**கைசி சுகதா ஸுஹவாணி, மன் பர்மாகி கோடா ;**
**ஐஸா கோடி மென் ஹி மிலா, போதி தர்ம கா மோடா.**
பர்மியத் தாயின் மடியில் இனிமையாக சுகமாக வளர்ந்தேன். அவரின் இந்த மடியில், போதி தர்மத்தின் இன்பமான மகிழ்ச்சியை அனுபவித்தேன்.
**KaisI sukhada suhavanI, man barma ki goda; Isa godi men hi mila , bodhi dharma ka moda.**
Oh the lap of Mother Burma is so soothing, so nurturing!
In this very lap did I get the blissful joy of Bodhi dharma

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

**கைசி சுகதா ஸுஹவாணி, மன் பர்மாகி கோடா ;**
**கரோன் பலா உபாஜென் யஹான், உமாதே மனா மென் மோடா.**
பர்மியத் தாயின் மடியில் இனிமையாக, சுகமாக வளர்ந்தேன். நான்கு விதமான பழங்களும் இதயத்தில் பழுத்தது போன்ற ( அதாவது அனைத்து பலன்களும் கிட்டி ) இனிமையான சந்தோஷத்தினால் பூரித்தேன்.
**KaisI sukhada suhavanI, man barma ki goda; Caron phala upajen yahan , umade mana men moda.**
Oh the lap of Mother Burma is so soothing so nurturing!
The heart is filled with joy seeing all four fruits ripening here.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

**ஜீவன் பரபுல்லிதா ரஹே, சதா பஸந்தா பஹரா ;**
**சிலா ஸ்நேஹஸே ஜபா பரே, சத் கிரஹஸ்தா பரிவாரா.**
வாழ்க்கை என்றும் இனிமையானது, இதில் எப்போதும் வசந்தம் தான் ;
ஒரு குடும்பத்தில் சில சந்தோஷங்கள் , அன்பு நீடிப்பது போல்.
**Jivana parapullita rahe, sada basanta bahara; Sila sneha se jaba bhare, sadhgrahastha parivara .**
Life is filled with joy , it is like spring all the time; When a householder's family is filled with sila and loving kindness.

--------------------------------------------.-----------------------------------------------------------------------------

**ஐஸா துகியாரே ஜகதா மெம், ஹோரவே தர்ம ப்ரஸாரா;**
**பைரா பாவ சப கே மிடென் , ஜகே பியாரா ஹி ப்யாரா.**
துக்கத்தால் நிரம்பிய இவ்வுலகில் எனது தர்மத்தை பரவச் செய்தேன்.
அனைத்து மனிதர்களின், உயிரிங்களின் இதயத்திலும் அன்பு நிறம்பட்டும்.
**Isa dukhiyare jagata mem, hove dharma prasara ; Baira bhava sabake miten , jage pyara hi pyara .**
My Dharma spread in this world filled with suffering ; May hearts be filled with love for all.